# போலீஸ் அதிகாரியை கண்டித்து ஆர்ப்பாட்டம்

புதுச்சேரி, செப். 12-

மனித உரிமை ஆர்வலர் மீது கொலைவெறி தாக்குதல் நடத்தியவர்கள் மீதும், அவர்களுக்கு துணைபோகும் காவல்துறை அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் புதுவையில் மனித உரிமைகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் இன்று குரல் முழக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஜென்மராக்கினி மாதா கோயில் எதிரே நடைபெற்ற போராட்டத்துக்கு செய்தி தொடர்பாளர் காளிதாசு தலைமை தாங்கினார். கோபாலகிருஷ்ணன், லட்சுமணசாமி, கந்தசாமி, மனோகரன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பின் தேசிய செயலாளர் ஹென்றி திபேன், வழக்கறிஞர் மோகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதில் மார்க்சிஸ்ட் ராஜாங்கம், லெனினிஸ்ட் பாலசுப்பிரமணியன், மதிமுக கபிரியேல், மனிதநேய மக்கள் கட்சி பஷீர் அகமது, திக சிவ.வீரமணி, அமமுக கணேசன், திவிக லோகு. அய்யப்பன், மக்கள் வாழ்வுரிமை இயக்கம் ஜெகன்நாதன், தந்தை பெரியார் திக வீரமோகன், தமிழர் களம் அழகர், பெரியார் சிந்தனையாளர் இயக்கம் தீனா உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

இதில் 75க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு உருளையன்பேட்டை போலீசாருக்கு எதிராக கோஷமிட்டனர். குற்றவாளிகளுக்கு துணைபோகும் அதிகாரிகள் மீது காவல்துறை தலைமை உரிய நடவடிக்கை எடுக்காவிடில் அடுத்தகட்ட போராட்டத்தில் ஈடுபடப்போவதாக நிர்வாகிகள் எச்சரித்தனர்.

தமிழ் முரசு
Wed, 12 September 2018
tm.dinakaran.com/c/32156234